PAPER - A5

**605 / 14**

தொடக்கநிலை 6

மாதிரி தேர்வுத்தாள் - A5



பெயர் : ____________________

வகுப்பு : ____________________

தேதி : ____________________

| |
|---|
| / 90 |

பெற்றோர் கையொப்பம் : ____________________

**A1 வேற்றுமை**

**Q1 முதல் Q5 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான வேற்றுமை உருபு ஏற்ற சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும்**

[Type here]

More papers at www.testpapersfree.com

**சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (10 மதிப்பெண்கள்)**

Q1. பறவைகள் உணவு தேட அதிகாலையிலேயே ________________ பறந்து செல்லும்.

(1) கூட்டில்
(2) கூட்டிற்கு
(3) கூட்டிலிருந்து
(4) கூட்டை ( )

Q2. என் தங்கை கீழே விழுந்ததால் ________________ கையில் சிராய்ப்புக் காயங்கள் ஏற்பட்டன.

(1) அவளுக்கு
(2) அவளிடம்
(3) அவளோடு
(4) அவளது ( )

Q3. _________ மிகவும் கவர்ந்த நாடுகளுள் ஒன்றாக சிங்கப்பூர் திகழ்ந்து வருகிறது.

(1) பயணிகளால்
(2) பயணிகளுக்கு
(3) பயணிகளை
(4) பயணிகளிடம் ( )

Q4. "பாபு, நாளை முதல் நீ பள்ளியிலிருந்து ____________________ வீடு திரும்ப வேண்டும்," என்று அப்பா கூறினார்.

(1) நேரத்திற்கு
(2) நேரத்தில்
(3) நேரத்துடன்
(4) நேரத்தை ( )

Q5. "________________ கொசு தொல்லையைத் தாங்க முடியவில்லை," என்று மாமா முணுமுணுத்தார்.

(1) எனக்கு
(2) என்னால்
(3) என்னை
(4) என்னிடம் ( )

**A2 செய்யுள் / பழமொழி**

**Q6 முதல் Q10 வரையுள்ள செய்யுள் / பழமொழியை நிறைவு செய்வதற்கு ஏற்ற சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர் OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (10 மதிப்பெண்கள்)**

[Type here]

More papers at www.testpapersfree.com

Q6. எண்ணும் எழுத்தும் கண்ணெனெ ____________.

(1) பெறும்
(2) போற்றும்
(3) ஆகும்
(4) தகும் ( )

Q7. ஐந்திலே ________ ஐம்பதில் வளையுமா ?

(1) வளைவது
(2) வளைந்தது
(3) வளையும்
(4) வளையாதது ( )

Q8. மகன் தந்தைக்கு ___________ உதவி இவன்தந்தை
என்நோற்றான் கொல்எனுஞ் சொல்.

(1) புரியும்
(2) ஆற்றும்
(3) ஈட்டும்
(4) நல்கும் ( )

Q9. _______________ ஒழுகு.

(1) ஓதுவது
(2) ஈவது
(3) ஒப்புரவு
(4) இயல்வது ( )

Q10. ______________ துணியாதே.

(1) ஆராயாமல்
(2) பகுத்தறியாமல்
(3) எண்ணிப்பாராமல்
(4) செய்வதறியாது ( )

**A3 அடைமொழி / எச்சம்**

**Q11 முதல் Q15 வரையுள்ள அடைமொழி / எச்சத்தை நிறைவு செய்வதற்கு ஏற்ற மிகப் பொருத்தமான சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில் அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு.**
**(10 மதிப்பெண்கள்)**

[Type here]

PAPER - A5

Q11. ______________ காரியத்தை முடிக்கும் வரை ஒருவர் ஓயக்கூடாது.

(1) செய்த
(2) துணிந்த
(3) சிந்தித்த
(4) எடுத்த ( )

Q12. மேரியின் ______________ குரல் அவள் பாடிய பாடலுக்கு மெருகூட்டியது.

(1) கனிவான
(2) மென்மையான
(3) அழுத்தமான
(4) தெளிவான ( )

Q13. தனியே ______________ மானைக் கண்டால் சிங்கம் அதை எளிதில்
வேட்டையாடும்.

(1) நின்ற
(2) நிற்கின்ற
(3) நின்று
(4) நிற்கும் ( )

Q14. காந்தியின் வாழ்க்கையில் நடந்த சில ______________ சம்பவங்களை
பற்றி என் கட்டுரையில் எழுதியிருந்தேன்.

(1) அரிய
(2) சிறந்த
(3) எளிய
(4) இனிய ( )

Q15. கவிஞர் கண்ணதாசன் பல தத்துவப் பாடல்களை ______________
ஆயிரக்கணக்கானோரின் மனத்தில் நீங்கா இடத்தைப் பெற்றிருக்கிறார்.

(1) புனைந்து
(2) அமைத்து
(3) வகுத்து
(4) தொகுத்து ( )

**A4 முன்னுணர்வுக் கருத்தறிதல்**

**Q16 முதல் Q20 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (10 மதிப்பெண்கள்)**

விக்ரமபுரி அரசன் வானவன் அண்டை நாட்டு மன்னன் தன் நாட்டின்மீது படையெடுத்து வரும் செய்தியைக் கேள்விப்பட்டான். அதனால், மன்னன் **Q16** ______________ போனான். உடனே,

[Type here]

More papers at www.testpapersfree.com

மன்னன் அமைச்சரிடம் ஆலோசனை கேட்டான். அப்போது அமைச்சர் மன்னரிடம், "அரசே நீங்கள் அழகாபுரி மன்னரிடம் உதவி **Q17** ________________ கடிதம் எழுதி அதை தூதுவனிடம் கொடுத்து அனுப்புங்கள் அதோடு **Q18** ________________ படை வரும் பாதை வழியாகவே அவன் செல்லட்டும்," என்றார். " அமைச்சரே**!** பகைவனான அழகாபுரி மன்னன் நமக்கு உதவி செய்யமாட்டான் . **Q19** ________________ நம் தூதுவன் ஏன் அவ்வழியாகச் செல்லவேண்டும் ?" என்று அரசன் வினவினான். அப்போது அமைச்சர் தனது திட்டத்தை விளக்கினார்.

அதன்படியே கடிதத்துடன் சென்ற தூதுவன் எதிரிகளிடம் சிக்கிக்கொண்டான். அவன் கையிலிருந்த கடிதத்தைத் பிடுங்கி அண்டை நாட்டு மன்னன் படித்தான். உடனே தளபதியிடம் அரசன் வானவன் உதவி கேட்டச் செய்தியைச் சொன்னான். படை எடுக்கும் திட்டத்தை **Q20** ________________ சொன்னான். அவன் தம் படைகளை மீட்டுக்கொண்டான்.

Q16. (1) உருகி
(2) குலைந்து
(3) சிதைந்து
(4) கலங்கி ( )

Q17. (1) கோரி
(2) பரிந்துரை
(3) வழங்க
(4) செய்து ( )

Q18. (1) ஆதரவாளரின்
(2) போட்டியாளரின்
(3) பகைவரின்
(4) நாட்டின் ( )

Q19. (1) அதன்படி
(2) மேலும்
(3) ஆனால்
(4) ஆயினும் ( )

Q20. (1) வெளியேற்ற
(2) கைவிட
(3) விடுவிக்க
(4) பின்வாங்க ( )



More papers at www.testpapersfree.com

**B5 தெரிவுவிடைக் கருத்தறிதல்**

**பின்வரும் பகுதியை கருத்தூன்றிப் படி.**

ஜப்பானில் தோக்கியோ நகருக்கு அருகிலுள்ள ஒரு சிற்றூரில் யாங் என்ற இளைஞன் ஒருவன் இருந்தான். அவன் மிகவும் ஏழ்மையான நிலையிலிருந்தான். ஒரு கோப்பை தேநீர் குடிக்கக்கூட அவனிடம் காசில்லை. ஆனால், அவனுக்கு நன்றாகச் சித்திரம் வரையத்தெரியும். குழலுதவும் தெரியும். எப்போது பார்த்தாலும் குழலில் ஏதாவது இசையை வாசித்துக்கொன்டே இருப்பான் அல்லது தரையிலோ, சுவரிலோ ஏதாவது ஓவியம் வரைந்துகொண்டிருப்பான். ஒருநாள் யாங், பசி மயக்கத்தினால் தெருவில் தள்ளாடித் தள்ளாடி நடந்து வந்து ஓர் உணவு விடுதியின் வாயிலில் உட்கார்ந்தான் . உணவு விடுதியின் உரிமையாளன், யாங் மீது பரிதாபப்பட்டு, அவனை உள்ளே அழைத்துப்போய் உணவளித்தான். பசியுடன்

[Type here]

More papers at www.testpapersfree.com

இருந்த யாங் அவ்வுணவை ஆவலுடன் விறுவிறுவென்று உண்டு முடித்தான். பின்னரே தன்னிடம் காசு இல்லாதது அவனது ஞாபகத்திற்கு வந்தது.

"உங்களிடம் கொடுக்க என்னிடம் பணமில்லை. ஆனால், இலவசமாகச் சாபிட்டுபோகப் மனம் இடம்தரவில்லை," என்று யாங் உணவு விடுதிக்காரனிடம் கூறினான் . பின்னர் ஏதோ ஒரு சிந்தனையில், அவன் ஒரு சுண்ணாம்புக் கட்டியை எடுத்து உணவு விடுதியின் சுவரில் அழகான அன்னப்பறவையின் சித்திரம் ஒன்றை வரைந்தான். அச்சித்திரம் பார்ப்பவரின் மனத்தைக் கொள்ளை கொள்வதாக அமைந்திருந்தது . " ஐயா, உங்களிடம் சாப்பிட்ட உணவுக்கு ஈடாக இந்த அன்னப்பறவையை வரைந்திருக்கிறேன். இது வெறும் ஓவியம் மட்டும் கிடையாது . உங்கள் விடுதியில் கூட்டம் அதிகமாய் இருக்கும்போது , நீங்கள் மூன்று முறை கையைத் தட்டி "யாங் " என்று அழைத்தால், இந்த அன்னப்பறவை உயிர்பெற்று வந்து நடனமாடும்," என்று கூறினான். உணவு விடுதிக்காரனுக்கு ஒரே மகிழ்ச்சி. உடனே அதை பரிட்சித்து பார்க்க விரும்பினான். யாங் அவனை தடுத்து நிறுத்தி ," இப்போது கூப்பிடாதீர்கள்! கூட்டமாக அதிகமாக இருக்கும் போதுதான் அழைக்கவேண்டும் ! தனி ஆளுக்காக நீங்கள் அழைத்தால், அதுவே அன்னத்துக்கு கடைசி அழைப்பாக மாறிவிடும்!" என்று எச்சரித்துவிட்டு வெளியேறினான்.

அன்னப்பறவை வந்தபிறகு , உணவு விடுதியில் கூட்டம் அலை மோதியது. அன்னப்பறவையின் நடனத்தை பார்ப்பதற்காகவே மக்கள் திரளாக வர ஆரம்பித்தனர். அன்னப்பறவையின் புகழ் மற்ற ஊர்களுக்கும் பரவியது . வெகு சீக்கிரத்தில் உணவு விடுதிக்காரன் பெருஞ்செல்வந்தனாக மாறினான் . ஓராண்டு கழித்து ஒருநாள் , அரசாங்கத்தில் பணி புரிந்த மூத்த அதிகாரி ஒருவர் அந்த உணவு விடுதிக்கு வருகையளித்தார். இரவு நேரம் என்பதால் அவ்விடுதியில் கூட்டமில்லை. அதிகாரி அன்னப்பறவையின் நடனத்தை நேரில் காண விரும்பி அதை அழைக்கும்படி கேட்டுக்கொண்டார். யாங் சொன்னதை நினைவுகூர்ந்த உணவு விடுதி உரிமையாளன் , முதலில் அவரின் கோரிக்கையயை நிராகரித்துவிட்டான். மூத்த அதிகாரி நிறைய பணம் தருவதாகக் கூறவே , இறுதியில் அவன் அந்த அன்னத்தை அழைத்தான்.

அன்னம் உயிர் பெற்று வந்து ஆடியது. ஆனால், வழக்கமாக ஆடுவதைப் போல் இல்லாமல் தள்ளாடித் தள்ளாடி ஆடியது. மிகவும் சோர்வாகக் காணப்பட்டது. அது விரைவிலேயே சுவரில் சித்திரமானது. அவ்வேளையில் , எங்கிருந்தோ புயல்போல யாங் அங்கு வந்தடைந்தான். தன் குழலை எடுத்து வாசிக்க தொடங்கினான்.

[Type here]

அவ்விசை அனைவரையும் சோகத்தில் மூழ்க வைத்தது. மீண்டும் அன்னம் சுவரிலிருந்து உயிர்பெற்று யாங் பின்னாலயே நடந்து போனது. அதன் பின் யாங்கையோ அந்த அன்னத்தையோ யாராலும் கண்டுபிடிக்க முடியவில்லை

**Q21 முதல் Q24 வரையுள்ள வினாக்கள் மேற்கண்ட கருத்தறிதல் பகுதியையொட்டி அமைத்துள்ளன. ஒவ்வொரு வினாவிற்கு உரிய மிகப். பொருத்தமான விடையைத் தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில் அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (8 மதிப்பெண்கள்)**

Q21. உணவு விடுதியின் உரிமையாளன் ஏன் யாங்கிற்கு உணவளித்தான் ?.

(1) அவன் யாங்கின்மீது இரக்கம் கொண்டதால்
(2) அவன் யாங்கின் திறமையை அறிந்து வைத்திருந்ததால்
(3) யாங் அவனுக்கு பணம் தருவதாக உறுதியளித்திருந்ததால்
(4) அவன் யங்கைப் பயன்படுத்தி பணம் சம்பாதிக்க எண்ணியிருந்ததால்

( )

Q22. அன்னப்பறவை எப்போதெல்லாம் உயிர்பெற்று ஆடும்?

(1) குழலிசையைக் கேட்கும்பொது
(2) உணவு விடுதியில் கூட்டம் கூடாதபோது
(3) யாங்கின் நினைவு வரும்போது
(4) உணவு விடுதிக்காரன் மூன்று முறை கைதட்டும்போது ( )

Q23. அன்னப்பறவையினால் உணவு விடுதிக்காரன் எவ்வாறு பயனடைந்தான்?

(1) அவனது புகழ் பரவியது
(2) அவனுடைய வியாபாரம் பெருகியது
(3) அவனுக்கு அரசாங்க மூத்த அதிகாரியின் பாராட்டுதல் கிடைத்தது
(4) அவனது கடைக்குப் பலர் வந்த வண்ணம் இருந்தனர் ( )

Q24 உணவு விடுதி உரிமையாளன் மூத்த அதிகாரியின் கோரிக்கையை முதலில் நிராகரித்ததன் காரணமென்ன ?

(1) மூத்த அதிகாரி பணிவுடன் நடந்துகொள்ளாததால்
(2) மூத்த அதிகாரி யங்கைப் பற்றி விசாரித்ததால்
(3) அப்போது விடுதியில் கூட்டமிருந்ததால்
(4) யாங்கின் எச்சரிக்கை ஞாபகத்திற்கு வந்ததால் ( )



More papers at www.testpapersfree.com

## சொற்பொருள்

**வினா Q25 இல் இடம்பெற்றுள்ள சொல்லின் பொருளை உணர்த்தும் சரியான சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (2 மதிப்பெண்கள்)**

Q25. பரிட்சித்து

(1) நடத்த
(2) சோதித்து
(3) செய்து
(4) திறந்து ( )

## C6 ஒலி வேறுபாட்டுச் சொற்கள்

**பின்வரும் பகுதியில் Q26 முதல் Q29 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு பொருத்தமான ஒலி வேறுபட்டுச் சொற்கள் இப்பகுதியின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்கு ஏற்ற மிகச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது. (8 மதிப்பெண்கள்)**

| | | |
|---|---|---|
| Q26 | முரளி தன் __________ போன வழியில் நடப்பதைக் கண்டு அவன் பெற்றோர் வருந்தினர். ஆனால், முரளி அவன் பெற்றோரைப் பற்றி எண்ணிப் பார்க்கவில்லை. | Q26 ( ) |
| Q27. | நான் என் பெற்றோருடன் ஒரு கலைநிகழ்ச்சிக்கு சென்றிருந்தேன் நான் பார்த்த __________ நிகழ்ச்சியில் இதுவே மிகச் சிறந்த ஒன்றாகும். | Q27 ( ) |
| Q28. | அம்மா ரவா மாவை __________ ஆற வைக்கிறார். இன்னும் சிறிது நேரத்தில் அதைக் கொண்டு கேசரி செய்வார். | Q28 ( ) |

[Type here]

| | | |
|---|---|---|
| Q29. | பாட்டி ___________ கொண்டு பணியாரம் செய்தார். அது சுவையாக இருந்தது. | Q29 ( ) |

| | |
|---|---|
| (1) வறுத்து<br>(2) களை<br>(3) வெள்ளத்தை<br>(4) வருத்து | (5) கலை<br>(6) மனம்<br>(7) மணம்<br>(8) வெல்லத்தை |

**<u>D7 கருத்து விளக்கப்படக் கருத்தரித்தல்</u>**
**<u>பின்வரும் விளம்பரத்தைக் கருத்தூன்றிப் படி</u>**



**சிறுவர்களுக்கான**
**கட்டுரை எழுதும் போட்டி,**
**மறுவேடப் போட்டி மற்றும்**
**செய்யுள் மணனப் போட்டி 2017**




<u>சிறுவர்களிடையே மறைத்திருக்கும் திறமைகளை வெளிக்கொணர அரியதோர் வாய்ப்பு!</u>

தேதி : 18 மார்ச் 2017, சனிக்கிழமை
நேரம் : காலை 9 மணி முதல் பிற்பகல் 12 மணி வரை
இடம் : மரின் பரேட் சமூக மன்றம்
**சிங்கப்பூர் நிரந்தரவாசிகளும் இப்போட்டிகளில் கலந்துகொள்ளலாம்.**



முதல் பரிசு : $200 பற்றுச்சீட்டு
இரண்டாம் பரிசு : $150 பற்றுச்சீட்டு
மூன்றாம் பரிசு : $100 பற்றுச்சீட்டு
ஆறுதல் பரிசுகள் : $50 பற்றுச்சீட்டு




**பிரிவு 1** : தொடக்கநிலை 4 ஆம் வகுப்பு மனவர்களுக்குச் செய்யுள் மணனப் போட்டி
**பிரிவு 2** : தொடக்கநிலை 5 முதல் 6 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு மாறுவேடப் போட்டி
**பிரிவு 3** : உயர்நிலை 1 முதல் 4 அம்ம வகுப்பு மாணவர்களுக்கு கட்டுரை எழுதும் போட்டி (தலைப்பு, போட்டி நடைபெறும் நாளன்று கொடுக்கப்படும்

| | |
|---|---|
| • பதிவு செய்துகொள்ள மரின் பரேட் சமூக மன்றத்திற்குச் செல்லலாம்.<br>• பதிவுசெய்துகொள்ள வேண்டிய இறுதி நாள் : 4 மார்ச் 2017<br>• பதிவு கட்டணம் (திரும்ப பெற முடியாது) | மாணவர்களே! இப்போதே உங்கள் ஆசிரியரின் உதவியை நாடி போட்டிக்குப் பதிவு செய்துகொள்வதோடு அதற்கு தயாராகுங்கள். |

**Q30 முதல் Q33 வரை இடம்பெற்றுள்ள வினாக்கள் முன்பக்கத்தில் தரப்பட்டுள்ள விளம்பரத்தை அடிப்படையாக கொண்டு அமைத்துள்ளன. ஒவ்வொரு தெரிவுவிடை வினாவிற்கும் உரிய மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து அதன் எண்னை அடைப்புக்குறிக்குள் எழுது. சுயவிடை வினாவிற்கு விளம்பரத்திலிருந்து விடையை கண்டறிந்து எழுது. (10 மதிப்பெண்கள்)**

Q30 எப்போது கட்டணம் செலுத்த வேண்டும்? (2 மதிப்பெண்கள்)

(1) மார்ச் மாதம் 18 ஆம் தேதியன்று
(2) மார்ச் மாதம் 4 ஆம் தேதியன்று
(3) போட்டிக்குப் பதிவு செய்துகொள்ளும்போது
(4) மரின் பரேட் சமூக மன்றத்திற்குச் செல்லும்போது ( )

Q31. போட்டியிலிருந்து விலக எண்ணும் சிறுவன் எதை மனதில் கொள்ளவேண்டும்? (2 மதிப்பெண்கள்)

(1) அவன் மேலும் $2 கட்ட வேண்டும்
(2) அவனுக்கு ஆறுதல் பரிசு கிடைக்காது
(3) அவனுக்கு அன்பளிப்புப் பை கிடைக்காது
(4) அவன் செலுத்திய $2 வெள்ளியை மீண்டும் பெற இயலாது ( )

Q32. இந்த நிகழ்ச்சி நடத்தப்படுவதன் நோக்கம் என்ன? (2 மதிப்பெண்கள்)

(1) சிறுவர்களின் மொழி அறிவைச் சோதிக்க
(2) சிறுவர்களின் திறமைகளை அடையாளம் காண
(3) சிறுவர்களிடையே மொழி ஆர்வத்தை வளர்க்க
(4) சிறுவர்களின் திறமைகளைக் கண்டறிந்து பாராட்ட ( )

Q33. இந்நிகழ்ச்சிக்கு ஆசிரியர்கள் எவ்வாறு தங்கள் பங்கை ஆற்றலாம்? (4 மதிப்பெண்கள்)

[Type here]

D8 சுயவிடை கருத்தறித்தல்
பின்வரும் கட்டுரைப் பகுதியைக் கருத்துன்றிப் படி.

நீண்ட காலத்திற்கு முன்பு பாக்தாத் நகரில் இரண்டு வியாபாரிகள் இருந்தார்கள். கலீல் மண்ணால் ஜாடிகள் செய்து விற்றான். அமீர் காய்கறி வியாபாரம் செய்து வந்தான். இருவரின் க டைகளும் அடுத்தடுத்து இருந்தன. இருவரும் வாரத்தில் ஒருநாள் பக்கத்து ஊரிலுள்ள சந்தைக்குப் போய் வியாபாரம் செய்தார்கள். எல்லாப் பொருள்களையும் சுமந்துகொண்டு நடந்து செல்ல அவர்களுக்குச் சிரமமாக இருந்தது. எனவே, தம் சுமைகளைச் சுமந்துகொண்டு போவதற்காக இருவரும் சேர்ந்து ஓர் ஒட்டகத்தை வாங்க முடிவு செய்தார்கள்.

கலீலும் அமீரும் சேர்ந்து ஓர் ஒட்டகத்தை மட்டும் வாங்கினார்கள். ஆனால், யாருடைய சாமான்களை முதலில் ஒட்டகத்தின்மீது ஏற்றுவது என்பதில் இருவருக்கும் இடையே தகராறு மூண்டுவிட்டது. கலீல் , "நான்தான் முதலில் ஜாடிகளை ஒட்டகத்தின்மீது ஏற்றிக்கொண்டு போவேன் . நீ மெதுவாக வா !" என்றான். அதற்கு அமீர் , " என்னுடைய காய்கறிகள் எல்லாம் வாடிப்போய்விடும். அதனால், நான்தான் முதலில் போவேன்," என்று பிடிவாதம் பிடித்தான். இருவரும் விட்டுக்கொடுக்கத் தயாராகவில்லை. அவர்கள் நீண்ட நேரம் விவாதம் புரிந்து இறுதியில் ஒரு முடிவுக்கு வந்தார்கள்:

ஆயினும் அதிலும் கலீலுக்கும் அமீருக்கும் உடன்பாடு இல்லை . " ஒட்டகம் யார் பக்கம் கழுத்தை நீட்டுகிறதோ, அவருடைய பொருளைதான் ஒட்டகத்தில் முதலில் ஏற்றவேண்டும்!" என்றான் அமீர். " அதெல்லாம் முடியாது. ஒட்டகம் யாருடைய கடை பக்கம் உட்காருகின்றதோ , அவர்தான் முதலில் ஒட்டகத்தைப் பயன்படுத்த முடியும் !" என்றான் கலீல்.

[Type here]

அப்போது ஒட்டகம் அமீருடைய கடை பக்கம் போய்த் தனது நீண்ட கழுத்தை நீட்டி அங்கிருந்த காய்கறிகளை தின்று தீர்த்தது. பின்னர் உண்ட களைப்பில் அடுக்கி வைக்கப்பட்டிருந்த ஜாடிகள்மீது அமர்ந்தது. அவ்வளவுதான் ஜாடிகள் உடைந்து தூள் தூளாயின . சண்டையிட்டுக்கொண்டிருந்த இருவரும் , சத்தம் கேட்டுத் திரும்பிப் பார்த்தார்கள். ஒட்டகத்தின் செயலை கண்டு அவர்கள் தலையில் கையை வைத்து உட்கார்ந்துவிட்டார்கள். தம்முடைய பிடிவாதத்தால் அடைந்த இழப்பை எண்ணி மனம் கலங்கினார்கள். அவர்கள், தமக்கு ஏற்பட்ட நஷ்டத்தை ஈடுசெய்ய ஒட்டகத்தை விற்றார்கள். கிடைத்த பணத்தை சமமாக பிரித்துக்கொண்டார்கள். வியாபாரம் நல்ல நிலைக்கு வந்தபிறகு இரண்டு ஒட்டகங்களை வாங்கி கொள்ளவேண்டும் என்று அவர்கள் முடிவு செய்தார்கள்.

**Q34 முதல் Q40 வரையுள்ள வினாக்களுக்கு மேற்கண்ட பகுதியிலிருந்து விடைகளைக் கண்டறிந்து எழுது.**
**( 22 மதிப்பெண்கள் )**

Q34. கலீலும் அமீரும் எவ்வாறு பணம் சம்மதித்தார்கள்? ( 2 மதிப்பெண்கள் )

______________________________________________
______________________________________________
______________________________________________
______________________________________________
________

Q35 வியாபாரிகள் ஏன் ஒட்டகம் வாங்க முடிவு செய்தார்கள்? (4 மதிப்பெண்கள் )

______________________________________________
______________________________________________
______________________________________________
______________________________________________
______________________________________________
______________________________________________
______________________________________________
__________

Q36 அமீருக்கும் கலீலுக்கும் இடையே சச்சரவு ஏற்படக்காரணம் என்ன?

[Type here]

( 3 மதிப்பெண்கள் )

Q37. யாருடைய வாதம் நியமானது? ஏன் ? ( 2 மதிப்பெண்கள் )

Q38. எது வியாபாரிகள் முடிவு எடுப்பதற்கு தடையாக இருந்தது? ( 3 மதிப்பெண்கள் )

Q39. வியாபாரிகள் எவ்வாறு தம்முடைய பொருள்களை இழந்தார்கள்? ( 3 மதிப்பெண்கள்)

[Type here]

More papers at www.testpapersfree.com

Q40. வியாபாரியின் செயலால் அவர்களுக்கு ஏற்பட்ட நிலையை விளக்கி உன் நண்பனுக்கு ஒரு குறிப்பு எழுது.. (4 மதிப்பெண்கள்)

அன்புள்ள நரேன்,

அன்பு நண்பன்,
விஷ்ணு.

[Type here]

More papers at www.testpapersfree.com

# PAPER 7

## தொடக்க நிலை 6

| | | |
|---|---|---|
| கே1) 3 | கே11) 4 | கே21) 1 |
| கே2) 4 | கே12) 2 | கே22) 4 |
| கே3) 2 | கே13) 4 | கே23) 4 |
| கே4) 3 | கே14) 2 | கே24) 4 |
| கே5) 2 | கே15) 1 | கே25) 2 |
| கே6) 4 | கே16) 4 | கே26) 6 |
| கே7) 4 | கே17) 1 | கே27) 5 |
| கே8) 2 | கே18) 3 | கே28) 1 |
| கே9) 3 | கே19) 4 | கே29) 8 |
| கே10) 2 | கே20) 2 | கே30) 3 |
| | | கே31) 4 |
| | | கே32) 2 |

More papers at www.testpapersfree.com

33) ஆசிரியர்கள் மாணவர்களிடம் இருக்கும் மறைந்து இருக்கும் திறமைகளை வெளி கொண்டு வர அவர்களை இந்த போட்டிக்கு பதிவு செய்யலாம் மேலும் அவர்கள் போட்டியில் சிறந்து விளங்க அவர்களுக்கு பயிற்சி அளிக்கலாம்.

34) கலீல் மண்ணால் ஆன ஜாடிகளை செய்து விற்றும், அமீர் காய்கறிகள் விற்றும் பணம் சம்பாதித்தனர்.

35) வாரத்தில் ஒரு நாள் பக்கத்து ஊரில் உள்ள சந்தைக்கு பொருள்களை சுமந்து சென்று விற்றனர். அவ்வாறு சுமந்து கொண்டு செல்வது இருவருக்கும் சிரமமாக இருந்ததால், இதன் காரணமாக வியாபாரிகள் சுமந்து செல்ல ஒரு ஒட்டகம் வாங்க முடிவு செய்தனர்.

36) யாருடைய சாமான்களை முதலில் ஒட்டகத்தின் மீது ஏற்றிக் கொண்டு செல்வது என்ற கருத்தில் இருவருக்குமிடையே தகராறு ஏற்பட்டது. இதுவே அமீருக்கும் கலீலுக்கும் இடையே சச்சரவு ஏற்படக்காரணம் ஆகும்.

37) அமீரின் வாதமே நியாயமானது. காரணம் மெதுவாக சென்றால் காய்கறிகள் அனைத்தும் வாடிவிடும் என்பதாகும்.

38) விட்டுக் கொடுக்கும் குணம் இருவரிடமும் இல்லை. இதுவே வியாபாரிகள் முடிவு எடுப்பதற்கு தடையாக இருந்தது.

More papers at www.testpapersfree.com

More papers at www.testpapersfree.com

39) வியாபாரிகள் இருவரும் விவாதம் புரிந்த வேளையில
ஒட்டகம் அமீரின் கடையில் உள்ள எல்லா காய்கறிகளையும்
தின்று தீர்த்தது. அதன் பின் உண்ட களைப்பில்
அடுக்கி வைத்த ஜாடிகள் மீது அமர்ந்ததால் அனைத்தும்
உடைந்தன. இவ்வாறு வியாபாரிகள் தம்முடைய
பொருட்களை இழந்தார்கள்.

40) வியாபாரிகள் சுமையை குறைக்க ஒர் ஒட்டகம் வாங்கினர்.
ஆனால் இருவரிடமும் விட்டு கொடுக்கும் குணம் இல்லாததால்
யார் முதலில் அதன் மீது பொருளை ஏற்றி செல்வது
என்பதில் விவாதம் ஏற்பட்டது, அவ்வேளையில் ஒட்டகம்
அவர்கள் பொருட்கள் அனைத்தையும் அழித்தது. அப்பொழுது
தான் தங்கள் குணத்தால் ஏற்பட்ட இழப்பை எண்ணி
கலங்கினர். அதை எடுகட்ட ஒட்டகத்தை விற்று
சமமாக பிரித்துக் கொண்டனர். வியாபாரம் நல்ல விலைக்கு
வரும் போது இரண்டு ஒட்டகம் வாங்க முடிவு செய்தனர்.

More papers at www.testpapersfree.com

More papers at www.testpapersfree.com